40

# நாள் பாடங்கள்

பெயர்

ஞானஸ்நானம் பெற்ற நாள்

# Indian Church of Christ

## Chennai

*முன்னுரை*

*பாடத்தை படிக்கும் வழிமுறைகள்*


1. முழுமையான இரட்சிப்பு
2. சோதிக்கபட்டும் தூண்டபட்டும்
3. வேர் விடுதல்
4. ஜெபிக்க கற்றுக்கொள்ளுதல்
5. தேவனுடைய கிருபை
6. நீடித்து இருப்பது நன்று
7. தேவனுடைய குடும்பம்
8. பரலோக மகிமையின் நம்பிக்கை
9. பலவிதமான சோதனைகள்
10. இயேசுவைப்போல் ஜெபித்தல்
11. சத்தியத்தில் நிலைத்திருத்தல்
12. நல்ல செயல்களை செய்தல்
13. சேவை செய்ய சீஷரானோம்
14. புதிய படைப்பு
15. பரலோகம் செல்வதற்கான நம்பிக்கை
16. இரட்சிப்பதற்கு இரட்சிக்கப்பட்டோம்
17. திசை திரும்பி அல்லது அர்ப்பணித்து
18. மற்றவர்களிடமிருந்து கற்றுக்கொள்ளுதல்
19. வல்லமையுள்ள ஜெபங்கள்
20. உலகத்தால் சோதிக்கப்படுதல்
21. துன்பத்தில் சந்தோஷம்
22. கொடுக்கும் வாழ்க்கை
23. பாவத்தை அறிக்கை செய்தல்
24. குடும்ப பாரங்கள்
25. வெளிப்படையாக இருத்தல்
26. சந்தேகங்களை கையாளுதல்
27. உண்மையாக இருக்க கற்றுகெள்ளுதல்
28. மாறுபட்ட சிந்தனைகள் (கருத்து வேறுபாடுகள்)
29. இயேசு சீக்கிரம் வருவார்
30. அன்பில் ஒற்றுமையாக இருப்பது
31. அதைரியத்தை அகற்றுவது
32. இயேசுவைப் போல் நடந்து கொள்ளுதல்
33. ஆகாயமண்டலத்தின் ஒளியைப்போல
34. திருத்தத்தை ஏற்றுக் கொள்ளுதல்
35. கிறிஸ்தவன் என்ற பெயருக்கு தகுதி
36. நம்பிக்கை மற்றும் எதிர்காலம்
37. கொடுப்பதின் கிருபை
38. புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கு.
39. விசுவாசமே ஜெயம்
40. நல்ல இருதயம், நல்ல செயல், நல்ல காரியங்கள்

## *முன்னுரை*

இயேசு கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற உங்களுக்கு இந்த பாடங்கள் மிகவும் சிறந்த ஒரு வழிகாட்டி. நீங்கள் ஞானஸ்நானம் பெற்றநாள் உங்கள் வாழ்கையில் மிக முக்கியமான நாள். இந்த நாளில் நீங்கள் புதிதாய்ப் பிறந்தீர்கள். ஞானஸ்நானதின் மூலமாக கிறிஸ்துவுடன் மரித்து, அவருடைய கிருபையை அடைந்து, கிறிஸ்துவுக்குள் புதுவாழ்வு வாழ எடுத்துள்ள இந்த முடிவு, உங்கள் வாழ்கையின் எல்லா பகுதிகளிலும் நல்ல விளைவை ஏற்படுத்தும். கொலேசேயர் 3:3ல் '...நீங்கள் மரித்தீர்கள். உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது' எனறு தேவ வார்த்தை சொல்கிறது.

நீங்கள் திட நம்பிக்கையை வளர்த்துகொள்ளும்படி, இந்த 40நாள் பாடங்கள் வேதாகமத்திலிருந்து வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும் சில வருடங்களாக சீஷராக இருப்பவர்களும் கூட இந்த அடிப்படை பாடங்களை படித்து, வாழ்கையை புதுபித்துக் கொள்ளலாம். இந்தப் பாடங்களைப் படிக்கும்போது தேவ வசனமானது உங்களுக்கு எத்தனை முக்கியத்துவம் வாய்ந்தது என்று நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். இப்பொழுது உறுதியான அஸ்திபாரத்தை கட்டினால், எப்பொழுதும் சிறந்த ஊழியம் செய்ய உதவும்.

வேத வசனங்களை அறிந்திருப்பது ஜீவ ஆதாரமானது. அவைகள் எல்லா நற்கிரியைகளையும் செய்ய தகுதியுள்ளதாக்குகிறது! (2தீமோத்தேயு 3:17). வேதாகமத்திற்கு தன்னை முற்றிலும் அர்ப்பணித்த இயேசு, ஆவிக்குரிய போராட்டமான நேரங்களில் வசனத்தை வல்லமையாகப் பயன்படுத்தினார். (மத்தேயு 4:1-11 மற்றும் லூக்கா 4:1-13). வேதவசனத்தை நேசிக்க வேண்டியதின் அவசியத்தை, இயேசு தன் முன்மாதிரியின்படி காண்பிக்கிறார். 'மனிதன் அப்பதினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படும் ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்' என்றார் இயேசு. (மத்தேயு 4:4). ஒவ்வொரு நாளும் நீங்கள் தேவ வார்த்தையைப் படிப்பதற்கு எதுவும் தடையிராதபடி, உங்கள் எண்ணத்தை சரிப்படுத்திக் கொள்ளுங்கள். ஏனென்றால் உங்கள் வாழ்க்கை இதை சார்ந்தே இருக்கிறது.



## *பாடத்தை படிக்கும் வழிமுறைகள்*

1. ஒரு நோட்டுப்புத்தகம் வாங்கி இதில் படிக்கும் பாடத்தின் குறிப்புகளை எடுக்கவும். உங்கள் பதில்களையும், எண்ணங்களையும் எழுதினால் உதவியாக இருக்கும். இப்போது நன்கு கற்றுக்கொண்டால், பிறகு மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ள மிகவும் உதவும்.
2. இந்த பாடத்தை படிக்க ஒவ்வொரு நாளும் தனிப்பட நேரத்தையும் இடத்தையும் ஒதுக்குங்கள். அப்பொழது தடையில்லாமலும் கவனம் சிதராமலும் இருக்கும். அதிகாலை நேரம் சிறந்தது.
3. வாசித்து, அடிக்கோடிட்டு, குறித்தும் வைத்து, வசனக்குறிப்புகளை அடையாளம் வைத்துக் கொள்ளுங்கள். இது உங்களுக்கு எந்த இடத்தில் எந்த பாகம் உள்ளது என்பதை ஞாபகம் வைத்துக்கொள்ள உதவும்.
4. முதிர்ந்த கிறிஸ்தவர்களுடன் உறவுமுறை வைத்துக்கொள்ள வேண்டும். அவர்கள் உங்கள் வளர்ச்சியை பரிசோதித்து கொள்வார்கள். உங்களுக்குக் கிடைக்க கூடிய எல்லா சந்தர்ப்பங்களையும் பயன்படுத்திக் கொள்ளுங்கள். அறிவுரைகளையும் சீர்த்திருத்தங்களையும் ஏற்றுக் கொள்ள ஆவலாய் இருங்கள். இக்கட்டான பிரச்சனையில் நீங்கள் கற்றுக்கொள்ளும் திறன் பிற்காலத்தில் உங்களுக்கு வல்லமையாக உதவி செய்யும். உங்களுடைய முழுமுயற்சியைக் கொடுக்கப்போகிறீர்களா?
5. ஒவ்வொரு பாடத்தையும் படிக்கும்போது அந்த நாளின் தேதியை குறிப்பிடுங்கள். அது உங்களுக்கு மாறாமல் இருக்கும் சீரான படிப்பை அறிந்து கொள்ள உதவும்.
6. இந்த குறிப்புகளை வைத்து உங்கள் மனஉறுதியை சோதியுங்கள். உங்கள் சொந்தக் குறிப்புகள், நீங்கள் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளும்போதும், உங்களுக்கு உற்சாகம் தேவைப்படும் போதும் உதவும்.

தேவனுடைய வார்த்தையுடன் அற்புதமான நேரத்தை செலவிடவுடம். அந்த நேரம் நீங்கள் தனிப்பட்ட முறையில் அவருடன் நெருங்கி வாழவும் மற்றவர்களை வசனத்தின் மூலமாக மாற்றவும் பயனுள்ளதாக இருக்கும். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!!!

## 1 முழுமையான இரட்சிப்பு

உங்கள் ஞானஸ்நானத்தின் மூலமாக தேவன் உங்களுக்கு செய்த காரியம் மிகவும் அற்புதமானது!!!

*கொலோசேயர் 1:21-23*

1 தேவனுடன் உங்கள் உறவுமுறை நேற்றுவரை எப்படி இருந்தது?

எது உங்களை தேவனுடைய சத்துருக்களாக மாற்றியது?

2 பரிசுத்தம், குற்றமற்றவர், கண்டிக்கபடாதவர் இவைகளின் அர்த்தம் என்ன?

3 இப்பொழுது ஒப்புரவான நீங்கள், கடைசிவரை நிலைத்திருக்க என்ன செய்ய வேண்டும்?

*1யோவான் 3:1-4*

1 தேவனுடைய குழந்தையாகிய உங்களுடைய எண்ணம் என்னவாக இருக்க வேண்டும்?

2 '...தன்னையும் சுத்திகரித்துகொள்கிறான்...' எப்படி உங்களை சுத்திகரிக்க முடியும்?

*எபிரேயர் 9:24-28, எபிரேயர் 10:19-23*

1 இயேசுவின் தியாகம் உங்களுக்கு என்ன செய்திருக்கிறது?

2 உண்மையுள்ள இருதயத்தோடு எப்படி நீங்கள் தேவனிடத்தில் சேரப்போகிறீர்கள்?

*சங்கீதம் 103:1-5*

1 தேவன் உங்களுடைய பாவத்தை என்ன செய்தார்?

2 தேவன் செய்த மற்ற உபகாரங்களையும் எழதுங்கள்.

*செயல்முறை*

உங்களை இரட்சித்ததற்காக தேவனைத் துதிக்கவும்.
தேவனுக்கு நன்றி செலுத்தி ஜெப பட்டியல் எழுதுங்கள்.



## 2 சோதிக்கபட்டும் தூண்டபட்டும்

*மத்தேயு 3:16 முதல் மத்தேயு 4:11 வரை*

1 இயேசு ஞானஸ்நானம் பெற்றவுடன் என்ன நடந்தது? உங்கள் ஞானஸ்நானத்திற்கு பிறகு நீங்கள் என்ன எதிர்பார்க்க வேண்டும்?

2 இயேசு தேவனோடு தனக்குள்ள உறவைக் குறித்தும், தேவனுடைய திட்டத்தைக் குறித்தும் சந்தேகப்படும்படி எவ்வாறு தூண்டப்பட்டார்?

3 ஞானஸ்நானம் பெற்றதிலிருந்து சாத்தான் உங்களை சந்தேகம், தாழ்வுணர்ச்சி, பயம் இவைகளில் எவ்வாறு சோதிக்கிறான்?

4 இயேசு சோதனைகளை எதிர்த்துப்போராட எப்படி வேதாகமத்தை பயன்படுத்தினார்? வேத வசனம் எவ்வாறு சாத்தானை பொய்யனாக வெளிப்படுத்தியது?

*எபிரேயர் 6:10-18*

1 சாத்தான் உங்களை எந்த வகையில் தூண்டலாம்?

2 நாம் உறுதியாக இருக்க உதவும் தேவனுடைய சர்வாயுத வர்க்கங்கள் எவை?

3 சாத்தானுக்கு எதிராக இருக்ககூடிய நம் ஒரே ஆயுதம் எது? (வச17)

*செயல்முறை*

நீங்கள் சோதிக்கப்படும் போது அதை குறித்து வெளிப்படையாக பேசுங்கள். இன்று மற்றொரு கிறிஸ்தவருடன் உங்கள் தூண்டுதல்களைப் பற்றிப் பேசி சேர்ந்து ஜெபியுங்கள்!

## 3 வேர் விடுதல்

*லூக்கா 8:13*

1 இளம் கிறிஸ்தவர்கள் வேர் விடாவிட்டால் என்ன நடக்கும்?

*அப்போஸ்தலர் 2:41-47* மற்றும் *4:32-37*

1 இளம் கிறிஸ்தவர்களை விசுவாசமாக வைக்க எது உதவியது?
2 அவர்களை போல நீங்களும் அப்போஸ்தலர் 2:42ல் சொல்லப்பட்ட காரியங்களில் உறுதியாய்த் தரித்திருக்கிறீர்களா?
3 சபையில் உங்கள் உறவுமுறை ஆழமாக இருக்க என்ன செய்யப் போகிறீர்கள்?

*1தெசலோனிக்கேயர் 1:2-10*

1 ''முழு நிச்சயத்தோடு'' என்றால் என்ன? மேலும் எப்படி நிச்சயப்படுத்த முடியும்? (வச5)
2 யாரை நீங்கள் பின்பற்றப் போகிறீர்கள்? எந்த வழிகளில்? (வச6)
3 மற்றவர்களுக்கு 'மாதிரியாக' மாறிக்கொண்டு வருகிறீர்களா? (வச7)

*செயல்முறை*

பின்பற்றக்கூடிய, உற்சாகமூட்டக்கூடிய, கற்றுக்கொள்ள மாதிரியாக உள்ள கிறிஸ்தவர்களுடன் இந்த வாரம் நேரம் செலவழியுங்கள்.



## 4 ஜெபிக்க கற்றுக்கொள்ளுதல்

*லூக்கா 11:1-13*

1 ஏன் ஜெபம் கற்றுக் கொள்ள வேண்டும்? யாரிடம் நீங்கள் கற்றுக்கொள்கிறீர்கள்?
2 (வச2-4) தேவனுடைய நாமத்தை எவ்வாறு துதிப்பீர்கள்? தேவனுடைய ராஜ்ஜியத்தின் (சபையின்) வளர்ச்சிக்காக ஜெபிக்கிறீர்களா? உங்களின் அன்றாடத் தேவைகள், மன்னிப்பு பெற மற்றும் மற்றவர்களை மன்னிக்க ஜெபிக்கிறீர்களா? சோதனைகளில் விழுந்து விடாமல் பாதுகாக்கபட ஜெபிக்கிறீர்களா?
3 வசனம் 5-13ல் ஜெபத்தைப் பற்றி மேலும் நாம் என்ன புரிந்து கொள்ளும்படி இயேசு விரும்புகிறார்?

*ஜெபிக்க கற்றுக் கொள்ளும் முறை:*

1. *துதித்தல்(போற்றுதல்)*
2. *பாவ அறிக்கை செய்தல்*
3. *நன்றி செலுத்துதல்*
4. *தேவைகளுக்காக விண்ணப்பித்தல்*

இவை ஒவ்வொன்றிலும் 10 நிமிடம் ஜெபித்தால், 40 நிமிடம் வல்லமையான ஜெபம் செய்ய முடியும். சங்கீதங்களைப் படித்து கடவுளை துதிக்க கற்றுக் கொள்ளுங்கள்.

*பிலிப்பியர் 4:6-7*

நாம் எதைப் பற்றி ஜெபிக்க வேண்டுமென தேவன் விரும்புகிறார்? இன்றைக்கு உங்களுக்கு உள்ள கவலைகள் என்ன? தேவனிடம் ஜெபிக்கும்போது அமைதி கிடைக்கிறதா? பதில் தருவார் என்று விசுவாசியுங்கள்!

*செயல்முறை*

கர்த்தருடைய ஜெபத்தை பின்பற்றி ஜெபியுங்கள். அல்லது முன் குறிப்பட்ட முறைபடி (துதி, பாவ அறிக்கை, நன்றி, விண்ணப்பம்) ஜெபிக்கவும். ஜெப விண்ணப்பங்களை எழுதி தேவன் எவ்வாறு பதில் அளிக்கிறார் என்று பாருங்கள்.

## 5 தேவனுடைய கிருபை

*ரோமர் 5:6-11*

1 கிறிஸ்து உங்களுக்காக மரித்தபோது எப்படி பெலனற்றவர்களாக இருந்தீர்கள்?

2 தேவன் உங்கள் மேல் வைத்துள்ள அளவற்ற அன்பை எப்படி விளங்கப்பண்ணுகிறார்?

*தீத்து 3:3-8* மற்றும் *தீத்து 2:11-14*

1 நாம் ஏன் நமது பழைய வாழ்க்கை முறையை நினைத்துக் கொள்ள வேண்டும்?

2 தேவனுடைய மன்னிப்பை சம்பாதிக்க நீங்கள் என்ன செய்தீர்கள்?

3 தேவனுடைய கிருபைக்கு நீங்கள் எப்படி பதில் அளிக்க வேண்டும்?

4 நீங்கள் எப்படி இச்சையடக்கமுள்ளவராய், நற்கிரியைகளைச் செய்ய ஆர்வமுள்ளவராய் இருக்க முடியும் என்று விவரிக்கவும்.

*1கொரிந்தியர் 15:9-10* மற்றும் *1தீமோத்தேயு 1:7-12*

பவுல் எவ்வாறு தன் நன்றியைத் தேவனுக்குத் தெரியப்படுத்துகிறார்?

*செயல்முறை*

நீங்கள் இரட்சிக்கப்பட்டதற்கு கடவுளுக்கு எப்படி நன்றி உள்ளவர்களாய் இருக்கப் போகிறீர்கள் என்பதைக் குறித்து 3 காரியங்களை எழுதுங்கள்.



## 6 நீடித்து இருப்பது நன்று

*2இராஜாக்கள் 7:3-11*

1 ஞானஸ்நானத்திங்கு முன், அந்த 4 குஷ்டரோகிகளைப் போல், எவ்வாறு நம்பிக்கை அற்றவர்களாய் இருந்தீர்கள்?

2 ‘முடிவில்லாவிருந்து’ போல எப்படி தேவனுடைய இராஜ்யம் இருக்கிறது?

3 சீஷராகிய நமக்கு வசனம் 9 எப்படி பொருந்தும்? உங்கள் எண்ணம்
இதேபோலிருக்கிறதா?

*ரோமர் 10: 1-4,14-21*

1 இழந்து போனவர்களைக் குறித்து பவுல் அக்கரையுள்ளவராய் இருந்ததுபோல நீங்கள் இருக்கின்றீர்களா?

2 தேவன் யாரை பிரசங்கிக்க அனுப்புகிறார்?

3 எல்லாரும் சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்கிறார்களா? ஏன்?

4 எந்த விதமான பதில் கிடைத்தாலும் நாம் சுவிஷேசம் பிரசங்கிப்பது ஏன் மிகவும் முக்கியமானது?

*சங்கீதம் 116:1-14*

தேவன் செய்த சகல நன்மைகளுக்கும் எப்படி கைம்மாறு செய்யப் போகிறீர்கள்?

*செயல்முறை*

இன்று எத்தனை பேரை அழைக்க போகிறீர்கள் என்று உங்கள் விசுவாசத்தின் படி தீர்மானியுங்கள். சோர்ந்து போகாமல் அழையுங்கள்.

## 7 தேவனுடைய குடும்பம்

*மாற்கு 3:31-33*

1 பிறந்த குடும்பத்திற்கும், ஆவிக்குரிய குடும்பத்திற்கும் இடையே இப்படிபட்ட முடிவை ஏன் இயேசு எடுத்தார்?

2 உங்களுக்கு மிகவும் நெருக்கமாக உள்ளவர்கள் யார்? எந்த வாய்ப்பை நீங்கள் தேர்ந்தெடுக்க வேண்டும்? தேவனுடைய மக்கள் உங்களுடைய குடும்பமாக இருக்கிறார்களா?

*1பேதுரு 1:22*

1 மாயமற்ற சகோதர சினேகிதம் என்றால் என்ன? சுத்த இருதயத்தோடே ஊக்கமாய் அன்பு கூறுவது எப்படி?

2 உங்கள் வாழ்கையில் இதற்கு முன்பு இந்த அளவுக்கு யாரை அன்பு செய்தீர்கள்? சீஷர்கள் மேல் நீங்கள் வைத்திருக்கும் அன்பு எப்படி வளர வேண்டும்?

*2கொரிந்தியர் 5:16-17*

1 இதற்குமுன் நீங்கள் உலகப் பிரகாரமாக எந்தெந்த விதங்களில் மக்களைப் பார்த்திருக்கிறீர்கள்?

2 மக்களைப் பார்க்கும் விதங்களில் எந்த அளவுக்கு மாற வேண்டும் (குறிப்பிட்டுச் சொல்லவும்)?

*1தீமோத்தேயு 5:1-2*

உங்கள் குடும்ப சபையில் இருக்கிற மக்களில் யார் உங்கள் ஆவிக்குரிய தகப்பனாக, ஆவிக்குரிய தாயாக, சகோதரனாக, சகோதரியாக மாற முடியும்?

*செயல்முறை*

உங்கள் குடும்ப சபையில் இருக்கிற கிறிஸ்தவர்களில், இதற்குமுன் நேரம் செலவிடாத இருவருடன் நேரம் செலவிடவும்.



## 8 பரலோக மகிமையின் நம்பிக்கை

*1கொரிந்தியர் 15:19*

1 உலக வாழ்க்கைகாக மட்டும் கிறிஸ்துவின் மேல் நம்பிக்கை வைக்ககூடாது- ஏன்?

2 நித்திய வாழ்க்கை இல்லையென்றால் கிறிஸ்தவர்களான நாம் பரிதபிக்கப்படத்தக்கவதுகள்- ஏன்?

*1கொரிந்தியர் 15:42-58*

1 எந்த ரகசியத்தை பவுல் நமக்கு சொல்கிறாது? (வச51)

2 சாதாரணமாக நமக்குமரணபயம் இருக்கிறது.- ஏன்?
இனிமேல் சாவைக் குறித்து பயமே இல்லை.- ஏன்?

3 நாம் கடவுளுக்காக எவ்வாறு உழைக்க வேண்டும்? நாம் நம்மை முழுமையாக அர்ப்பணிக்கும் போது என்ன நடக்கும்?

*கொலோசேயர் 3:1-4*

1 எப்போது கிறிஸ்துவுடன் உயிர்த்தெழுந்தீர்கள்?

2 நாம் எவைகளை தேட வேண்டும்?

3 நாம் எவைகளை நாட கூடாது?

*செயல்முறை*

பரலோகம் எப்படி இருக்கும் என்பதை சிறிது நேரம் நினைத்துப் பாருங்கள். பரலோகம் செல்வதற்கு வாய்ப்பை அளித்த தேவனுக்கு நன்றி சொல்ல ஒருபோதும் மறவாதிருங்கள்.

## 9 பலவிதமான சோதனைகள்

*யாக்கோபு 1:2-8*

1 ஏன் தேவன் நம்மை சோதனைக்குள்ளாக அனுமதிக்கிறார்?
2 சோதனைகளில் அகப்படும் போது உங்களுடைய எண்ணம் என்னவாக இருக்க வேண்டும்?
3 உங்களுடைய வாழ்க்கையில் இப்போது உள்ள சோதனைகள் எவை?

*யாக்கோபு 1:12-15*

1 பலவிதமான சோதனை மற்றும் பரீட்சைகளில் உறுதியாய் நிற்க எவ்வாறு சோதனையை சகிக்க வேண்டும்?
2 சோதனைகள் எங்கிருந்து வருகின்றன? எந்தக் காரியங்கள் உங்களைத் தூண்டுகின்றன? உங்கள் தூண்டுதல்களைப் பற்றி தேவனிடம் மற்றம் மற்ற சீஷருடன் பேசினீர்களா?

*1பேதுரு 1:3-9*

1 சோதனைகளில் நாம் சந்தோஷமாக இருக்க வேண்டும்.- ஏன்?
2 உங்கள் விசுவாசம் உண்மையானதா என்று எப்பொழுது தெறியும்?
3 உங்கள் வழிகளில் வர சாதகமாக உள்ள சில சோதனைகளை பட்டியல் இடுங்கள். (பணம், உறவுமுறை, துன்பங்கள்....) எதிர்காலத்தில் வரக்கூடிய சோதனைகளை எதிர்கொள்ள எவ்வாறு ஆயத்தமாகப் போகிறீர்கள்?

*செயல்முறை*

நீங்கள் அகப்படும் சோதனைகளையும், தூண்டுதல்களையும் பற்றி மற்ற சீஷரிடம் பேசுங்கள். சோதனைகளைப் பற்றிய உங்கள் எண்ணத்தைப் பற்றி கலந்து ஆலோசியுங்கள். சந்தோஷமாக இருங்கள்.



## 10 இயேசுவைப்போல் ஜெபித்தல்

*மாற்கு 1:32-39*

1 இயேசு ஜெபிப்பதற்காக என்ன தியாகம் செய்தார்? அவருடைய முந்தைய நாளை நினைத்துப் பாருங்கள். ஜெபம் செய்யாதல் இருப்பதற்காக என்னென்ன சாக்குப் போக்குகள் வைத்திருக்கலாம்?
2 ஜெபத்தின் அவசியத்தை எப்போழுது உணர்கிறீர்கள்? நீங்கள் ஜெபிக்காமல் இருந்ததற்கு என்ன சாக்கு போக்கு வைத்தீர்கள்?
3 கடந்த 10 நாட்களாக உங்கள் ஜெபநேரம் எப்படி இருக்கிறது?

*எபிரேயர் 5:7-10*

1 இயேசு எப்படி ஜெபித்தார்?
2 சிலுவைக்குப் போவதைத் தவிர வேறு எந்தக் காரியமாவது இயேசுவின் வாழ்க்கையில் கீழ்படியக் கஷ்டமாக இருந்ததுண்டா?
3 சீஷராக உள்ள உங்களுக்கு எந்தெந்த காறியங்கள் கஷ்டமாக உள்ளது?
4 நீங்கள் கீழ்படிதலுள்ளவராக இருக்க தேவனிடம் உரத்த சத்தத்தோடும், மிகுந்த கண்ணீரோடும் ஜெபித்திருக்கிறீர்களா?
5 உங்கள் வாழ்க்கையில் எந்தெந்த சூழ்நிலைகளில் மிக அதிகமாக ஜெபிக்க வேண்டும்? பட்டியல் தயாரிக்கவும். குறிப்பிட்டு எழுதவும்.

*செயல்முறை*

உங்கள் பட்டியலில் எழுதிய காரியங்களைக் குறித்து ஜெபிக்க நேரம் ஒதுக்குங்கள். குறிப்பிட்டு ஜெபியுங்கள். உரத்த சத்தத்தோடு தேவனோடு பேச முயலுங்கள். அதைக்குறித்து உங்கள் எண்ணத்தையும், அது எவ்வளவு கடினம் என்றும் சொல்லுங்கள்.

கடந்த 10 பாடங்களிலும் ‘செயல்முறை’ பகுதி உள்ளது. அவை அனைத்தையும் செய்து விட்டீர்களா?

## 11 சத்தியத்தில் நிலைத்திருத்தல்

*2தீமோத்தேயு 2:14-19*

1 வசனத்தை குறித்து வாக்குவாதம் செய்து தனது சொந்த கருத்துகளை சிலர் பரப்புவது ஏன்? நீங்கள் வசனத்தை குறித்து வாக்குவாதம் செய்ததுண்டா? அதை குறித்து மற்றொரு சீஷரிடத்தில் பேசி இருக்கின்றீர்களா?

2 வெட்கப்படாத ஊழியக்காரனாக எப்படி மாறமுடியும்?

3 வசனத்தையும் சபையையும் குறித்து சீர்கேடான வீண் பேச்சுகளை பேசியதுண்டா? அவைகளை எப்படி தவிர்க்கமுடியும்?

*1தீமொத்தேயு 1:18-20*

1 எப்படி நல்ல போராட்டம் பண்ண முடியும்?

2 விசுவாசமான கப்பலை எப்படி சிலர் சேதப்படுத்தினார்கள்? (வச19)

3 வசனம்20-ல் இமெனேயும் அலெக்சந்தரும் விசுவாசத்தை விட்டு விலகி சென்றனர். அதன் விளைவு என்ன? அவர்கள் எப்படி சபையை துன்பப்படுத்தினர்?

*1தீமொத்தேயு 4:15-16*

1 உங்களை குறித்தும் (உங்கள் செயல்) உபதேசத்தை குறித்தும் (வேதவசனம்) தினந்தோறும் எச்சரிக்கையாய் இருக்கின்றீர்களா?

2 உங்கள் வாழ்க்கையில் மாற்றத்தை மற்றவர்கள் பார்க்க முடிகிறதா?

*2தீமோத்தேயு 2:22-26*

எதிர்பேசுகிறவர்களுக்கு எப்படி உபதேசிக்கவேண்டும்?

*செயல்முறை*

வசனத்தை குறித்தோ சபையை குறித்தோ உங்களுக்குள்ள சந்தேகத்தை வழிநடத்துனரிடத்தில் கேட்கவும்.



## 12 நல்ல செயல்களை செய்தல்

*எபேசியர் 2:10*

1 கடவுள் நம்மை என்ன செய்வதற்கு படைத்திருக்கிறார்?

2 நல்ல செயல்களை பட்டியலிடவும்.

*1பேதுரு 4:8-11*

1 அன்பு எப்படி திரளான பாவங்களை மூடும்?

2 முறுமுறுப்பு இல்லாமல் மற்ற சீஷர்களை உபசரிக்கிறீர்களா?

3 உபசரிப்பதில் எப்படி நீங்கள் மாறமுடியும்?

4 மற்றவர்களுக்கு கொடுப்பவர்களாக இருப்பதை ஏன் கடவுள் எதிர்பார்க்கிறார்?

*கலாத்தியர் 6:9-10*

1 நாம் யாருக்கு நன்மை செய்ய வேண்டுமென்று கடவுள் எதிர்பார்க்கிறார்?

2 உங்கள் குடும்ப சபையில் நீங்கள் உதவி செய்யும் படிக்கு தேவையில் இருப்பவர் யார்?

*செயல்முறை*

நீங்கள் உதவி செய்ய நினைப்பவர்களுக்கு இந்த வாரமே உதவி செய்யுங்கள். எப்படி உதவி செய்வது என்று தெரியவில்லையெனில் நீங்கள் உதவி செய்ய நினைப்பவரிடம் கேளுங்கள். நாம் ஒரு குடும்பம். ஒருவருக்கு மற்றவரின் உதவி தேவை.

## 13 சேவை செய்ய சீஷரானோம்

*மத்தேயு 25:31-46*

1 கடைசி நாளில் எதைக் குறித்து நாம் நியாயம் தீர்க்கப்படுவோம்?
2 பிச்சைக் காரருக்கு பணம் கொடுத்தால் மட்டும் போதாது- ஏன்?
3 வசனம் 35, 36ல் பட்டியலிட்டுள்ள 6 காரியங்களில் எவைகளை கடைசியாக செய்தீர்கள்?
4 தேவை உள்ளவர்களை தள்ளி விடும்போது நாம் யாரை தள்ளி விடுகிறோம்?

*உபாகமம் 15:7-10*

1 ‘‘இருதயத்தை கடினமாக்குதல்’’ ‘‘கையை மூடுதல்’’ என்பதின் அர்த்தம் என்ன?
2 எப்படி கொடுக்க வேண்டும் என்று தேவன் நம்மிடத்தில் எதிர்பார்க்கிறார்?
3 உங்களைச் சுற்றியுள்ள ஏழைகளுக்கும், தேவை உள்ளவர்களுக்கும் நீங்கள் எப்படி உதவி செய்யப் போகிறீர்கள்?

*மத்தேயு 10:42*

1 எப்படிப்பட்ட அன்பான சிறிய உதவிகளை தேவன் மறப்பதில்லை?
2 குறைந்த பணம் உள்ள போதும் ஏழைகளுக்கு எப்படி உதவி செய்வாய்?

*யாக்கோபு 1:27*

1 தேவனுக்கு முன்பாக மாசு இல்லாத சுத்தமான பக்தி எது?
2 யாருக்காக கடவுள் விஷேசித்த அக்கரை வைத்திருக்கிறார்?

*செயல்முறை*

இன்று யாருக்கு நீங்கள் உதவி செய்ய முடியும்? அதைச் செய்யுங்கள். இந்த வாரத்தில் தேவையுள்ளவர்களுக்கு உதவி செய்யும்படி மற்ற சீஷர்களுடன் சேர்ந்து திட்டமிடுங்கள்.



## 14 புதிய படைப்பு

*2கொரிந்தியர் 5:17*

1 உங்களிலிருந்து மறைந்த பழைய குணங்கள் எவை?
2 உங்களில் புதிதாய் வந்துள்ள புதிய குணங்கள் எவை?

*மாற்கு 2:21-22*

1 எவ்வளவு புதியவர்களாக (மாறினவர்களாக) நீங்கள் இருக்க வேண்டும்?
2 நீங்கள் பழைய செயல்களை மாற்றிக் கொள்வதற்கும், புதிய பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கும் வித்தியாசம் என்ன?
3 நீங்கள் பழைய திராட்சைத் துருத்திகளா? அல்லது புதியவைகளா? ஏப்படி?

*ரோமர் 12:2*

1 உங்கள் வாழ்க்கையில் உள்ள உலகப்பூர்வமான சிந்தனைகளை குறிப்பிடுக!
2 அவற்றை எப்படி மாற்றிக் கொள்ள முடியும்?

*எபேசியர் 4:17 முதல் 5:2 வரை*

1 உங்களது பழைய வாழ்க்கையையும் சிந்தனையையும் கடவுள் எப்படி விவரிக்கிறார்?
2 யாரைப் போலிருக்க நீங்கள் படைக்கப்பட்டு இருக்கிறீர்கள்? ஒருவரை ஒருவர் மன்னிப்பது ஏன் முக்கியமானது?
3 ‘‘அன்பான வாழ்க்கை’’ வாழ்வது என்பதின் அர்த்தம் என்ன?

*செயல்முறை*

உங்களது வழிநடத்துனரிடம் அல்லது உங்களை நன்றாக புரிந்து கொண்ட சீஷரிடம் உங்களது வாழ்வில் உள்ள உலகப் பூர்வமான காரியங்களை காண்பிக்கச் சொல்லுங்கள்.

## 15 பரலோகம் செல்வதற்கான நம்பிக்கை

*வெளிப்படுத்தின விசேஷம் 20:11-15*

1 நியாயத் தீர்ப்பு நாள் எப்படி இருக்கும் என கற்பனை செய்து பார். அங்கு நியாயம் தீர்ப்பவர் யார்?
2 எல்லோரும் எப்படி உணர்வார்கள்?

*வெளிப்படுத்தின விசேஷம் 21:1-8*

1 கிறிஸ்துவின் மணவாட்டி யார்?
2 பரலோகத்தைப் பற்றி விவரி?
3 உங்கள் வாழ்க்கையோடு வசனம் 8-ஐ ஒப்பிட்டு பார்க்கவும்.
4 இந்த பாவங்களில் ஏதேனும் உங்கள் வாழ்வில் உள்ளதா?

*வெளிப்படுத்தின விசேஷம் 22:1-6*

1 பரலோகத்தில் நிரந்தர சந்தோஷப்படகூடிய காரியங்கள் எவை?
2 இந்த வசனங்கள் உண்மையும், சத்தியமுமானவைகள் என்று நாம் அறிய வேண்டுமென்று ஏன் தேவன் விரும்புகிறார்?

*வெளிப்படுத்தின விசேஷம் 22:14-15*

இதில் சொல்லபட்ட பாவங்கள் ஏதேனும் உங்கள் வாழ்வில் உள்ளதா?

*செயல்முறை*

பரலோகத்தில் உள்ள வாக்கு தத்தத்தைக் குறித்து ஜெபியுங்கள். மாறவேண்டிய, அறிக்கை செய்யாத பாவங்கள் உண்டா? இன்றே அறிக்கை செய்யவும்.



## 16 இரட்சிப்பதற்கு இரட்சிக்கப்பட்டோம்

*1பேதுரு 2:9-10*

1 இராஜரீகமான ஆசாரியக் கூட்டம் என்பதின் அர்த்தம் என்ன?
2 எந்த செய்தியை நாம் அறிவிக்க வேண்டும்?
3 நீங்கள் கடவுளின் மகிமையை அறிவிக்கிறீர்களா? அல்லது வெறும் அழைப்பிதழ் அட்டையை கொடுக்கிறீர்காளா?

*2கொரிந்தியர் 5:14-21*

1 நீங்கள் இயேசுவுக்காக வாழ்கிறீர்களா, அல்லது உங்களுக்காக வாழ்கிறீர்களா என்பதை எப்படி சொல்ல முடியும்?
2 ‘‘கிறிஸ்துவின் ஸ்தானாதிபதிகள்’’ என்பதின் அர்த்தம் என்ன?
3 கிறிஸ்துவைப் பிரதிபலிக்கும் உங்கள் வாழ்க்கையைக் குறித்து இயேசு சந்தோஷமடைவாரா?
4 உங்களைக் கொண்டு புத்திசொல்வது என்றால் என்ன? பவுல் உங்களிடத்தில் வேண்டிக் கொள்வது என்ன?
5 இழந்து போனவர்களைக் குறித்து உங்களின் எண்ணம் எப்படி உள்ளது?

*அப்போஸ்தலர் 17:16-34*

1 எதைக்குறித்து பவுல் வைராக்கியமடைந்தார்?
2 உங்களைச் சுற்றி இருக்கும் எந்த காரியத்தை குறித்து நீங்கள் வைராக்கியமடைய வேண்டும்?
3 தன் விசுவாசத்தை பவுல் எங்கே பகிர்ந்து கொண்டார்?
4 செய்தியை தொடங்குமுன் ஏத்தேன் மக்களை ஆவிக்குரியவர்கள் என்று பாராட்டுவது ஏன்?
5 மற்ற மதத்தில் இருப்பவர்களுக்கு எப்படி கற்றுக் கொடுக்க வேண்டும் என்பதை உங்களால் புரிந்து கொள்ள முடிகிறதா?
6 பவுலின் செய்திக்கு மக்கள் எப்படி பதில் அளிக்கிறார்கள்?

*செயல்முறை*

இந்த பாடத்திலிருந்து விசுவாசத்தை பகிர்ந்து கொள்வதில் மாற வேண்டிய 4 காரியங்களை பட்டியலிடவும். இதை நினைவில் கொண்டு மற்றவர்களை சபைக்கு அழைக்கவும்.

## 17 திசை திரும்பி அல்லது அர்ப்பணித்து

*லூக்கா 10:38-42*

1 ஏன் மார்த்தாள் வருத்தப்பட்டாள்?
2 அவள் எப்படி உணர்ந்தாள்?
3 இந்த வாரத்தில் எந்தெந்த வழிகளில் நீங்கள் எண்ணத்தை சிதற விட்டீர்கள்?
4 நீங்கள் மார்த்தாளைப் போல் இருக்கிறீர்களா? அல்லது மரியாளைப் போல் இருக்கிறீர்களா?
5 மரியாள் எதைத் தெரிந்து கொண்டாள்?
6 இது எந்த வகையில் சிறந்தது?

*லூக்கா 8:14*

1 ‘நெருக்கப்படுதல்’ என்பதன் பொருள் என்ன?
2 அதன் விளைவு என்ன?
3 என்ன கவலைகள், பணம் மற்றும் பொருளாதார நெருக்கடிகள், சிற்றின்பம் நீங்கள் வளர்வதற்கு தடையாக இருக்கின்றன?

*லூக்கா 12:35-40*

1 நாம் ஏன் இயேசுவின் வருகைக்காக தயாராகவும், விழிப்பாகவும் இருக்க வேண்டும்?
2 நம்முடைய நோக்கத்திலிருந்து திசை திருப்பப்பட்டு மற்ற காரியங்களில் ஈடுபடும்போது இயேசு எப்படி உணர்கிறார்?

*செயல்முறை*

உங்கள் நேரம் வீணாகவும் திசை திருப்பப்பட்டும் இருந்தால் கால அட்டவணையை தினமும் எழுத ஆரம்பிக்கவும். மற்ற சீஷர் உங்களுக்கு உதவச் செய்யுங்கள்.



## 18 மற்றவர்களிடமிருந்து கற்றுக்கொள்ளுதல்

*மத்தேயு 18:1-4*

1 நமக்கு எப்படிபட்ட இருதயம் இருக்க வேண்டும் என தேவன் விரும்புகிறார்?
2 குழந்தைகளுடைய எந்த குணங்களை நாம் பின்பற்ற வேண்டும்?

*1தெசலோனிக்கேயர் 5:12-14*

1 கர்த்தருக்குள் உங்களை விசாரணை செய்கிறவர்கள் யார்?
2 விசாரணை செய்வதற்கு வயதோ கல்வியோ தேவையா?
3 அதிகமாக பிரயாசப்பட்டு, உதாரணமாக இருந்து, புத்திசொல்கிற சில கிறிஸ்தவர்களின் பெயர்களை எழுது.
4 அவர்களுக்கு மரியாதை செலுத்துகிறீர்களா?
5 எப்படிப்பட்ட சீஷர்களுக்கு சிறப்பான கவனம் தேவை?
6 நீங்கள் இதுபோல் இருந்த போது உங்களுக்கு புத்தி சொல்லப் பட்டதா?

*சங்கீதம் 119:99-100*

1 எப்படி அறிவுள்ளவனாக, ஞானமுள்ளவனாக இருக்க முடியம்?
2 சமுதாயம் நினைப்பது போல் இல்லாமல், வசனம் 100-ல் என்ன காண்கிறோம்?
3 உங்களைவிட வயதில் குறைந்தவர்கள் உங்களுக்கு கற்றுக் கொடுப்பது, வழிநடத்துவது, சீர்திருத்துவது பற்றி உங்கள் எண்ணம் எப்படி இருக்க வேண்டும்?

*1தீமோத்தேயு 4:11-12*

இளம் தலைவர்களிடமிருந்து கடவுள் என்ன எதிர்பார்க்கிறார்?

*சங்கீதம் 32:8-10*

குதிரை அல்லது கோவேறு கழுதைப் போல் நாம் எவ்வாறு இருக்கக் கூடாது?

*செயல்முறை*

நீங்கள் இளம் கிறிஸ்தவர்களிடமிருந்து கற்றுக்கொள்ள விருப்பம் இல்லாமல் இருந்தால் இன்றே மனம் திரும்புங்கள். நீங்களே இளம் கிறிஸ்தவராக இருந்தால் விசுவாசிகளுக்கு முன்பாக நல்ல மாதிரியாக நடங்கள்.

## 19 வல்லமையுள்ள ஜெபங்கள்

*1நாளாகமம் 17:15-22*

1 தாவீது கடவுளிடம் ஜெபிக்கும் போது எப்படி உணர்ந்தார்? ஏன்?
2 தகுதியில்லாத உங்களை தேவன் ஆசீர்வாதங்களோடு எப்படி நடத்தினார்?
3 தேவன் இஸ்ரவேலை எவ்வாறு ஆசீர்வதித்தார்?
4 தேவன் தம் ஜனங்களுக்கு இன்றும் செய்கின்ற பெரிய காரியங்கள் எவை?
5 இந்த ஜெபம் தேவனைப் பற்றிய எந்த எண்ணத்தை வெளிப்படுத்துகிறது?

*ஆதியாகமம் 24:10-27*

1 தேவன் இந்த ஜெபத்திற்கு ஏன் உடனே பதில் அளித்தார் என நினைக்கிறீர்கள்?
2 வேலைக்காரனின் ஜெபம் மிக எளிதானது, ஆனாலும் விசுவாசம் மிகுந்தது. அதை எப்படி சொல்லமுடியும்?
3 ஜெபத்திற்கு பதில் கிடைத்தவுடன் வேலைக்காரன் உடனே என்ன செய்தான்?
4 உங்களுடைய ஜெபங்களுக்குப் பதில் கிடைத்தவுடன் நீங்கள் தேவனுக்கு நன்றி சொல்கிறீர்களா?

*யாக்கோபு 5:15-18*

1 எது ஜெபத்தை வல்லமையாகவும், பலனை உண்டு பண்ணுவதாகவும் இருக்கிறது?
2 நீங்கள் கருத்தாகவும், ஊக்கமாகவும் ஜெபிக்கிறீர்களா?
3 மகத்தான விசுவாசத்தோடு ஜெபிக்கிறீர்களா? இந்த வாரத்தில் நீதியாய் இருந்தீர்களா?

*செயல்முறை*

இன்று ஒரு குறிப்பிட்ட காரியத்திற்காக ஜெபிக்கவும். விசுவாசத்தோடும் ஊக்கத்தோடும் ஜெபிக்கவும்.



## 20 உலகத்தால் சோதிக்கப்படுதல்

*சங்கீதம் 73:1-14*

1 தன்னைச்சுற்றியுள்ள செல்வந்தர்கள் இரட்சிக்கப்படாமல் இருப்பதைப் பார்த்து இந்த எழுத்தாளர் எப்படி உணர்கிறார்?
2 தன் வாழ்க்கை விருதாவாக இருப்பதாக ஏன் அவர் நினைக்கிறார்?
3 உலக மக்களைக் கண்டு பொறாமைப்பட்டு இருக்கிறீர்களா?
4 நீங்கள் கிறிஸ்தவராக ஆனதிலிருந்து இந்த விஷயத்தில் போராடினீர்களா? அதைக் குறித்துப் பேசினீர்களா?

*சங்கீதம் 73:15-22*

1 அவர்களுடைய கடைசிமுடிவைக்குறித்து எவ்வாறு உணர்ந்தார்?
2 நியாயத்தீர்ப்பு நாள் அன்று, நித்திரை தெளிந்தவுடனே சொப்பனம் ஒழிவதுபோல, ''நல்ல வாழ்க்கை'' இருக்கிறது. எவ்வாறு?
3 மற்றவர்கள் மீது பொறாமைப்பட்ட ஆசிரியர் என்ன நினைத்தார்?

*சங்கீதம் 73:23-28*

1 தேவனோடு உள்ள உறவு முறைப்பற்றி எப்படி நினைத்துப் பார்த்தார்?
2 வசனம் 25,26ஐ மனப்பாடம் செய்க!

*1யோவான் 2:15-17*

1 உலகத்தின் எந்தெந்த காரியங்களை வெறுக்க வேண்டும்?
2 உங்களை இன்னும் கவரக்கூடிய உலக காரியங்கள் ஏவை?

*செயல்முறை*

உலக வாழ்க்கையைப் பற்றிய உங்கள் எண்ணத்தைப்பற்றி உங்கள் வழிநடத்துனரிடம் பேசுங்கள். எந்த மாதிரியான தூண்டுதல்களில் இருந்தீர்கள்? அவைகளுக்காக ஜெபியுங்கள்.

## 21 துன்பத்தில் சந்தோஷம்

*மத்தேயு 5:10-11*
1 துன்பமான நேரத்தில் எவைகள் நம்மை சந்தோஷப்படுத்த செய்யும்?
2 இயேசுவை குறித்து உங்களை நிந்தித்து, துன்பப் படுத்தி பலவித தீமையான மொழிகளை கூறி இருக்கிறார்களா?
3 அதுபோன்ற நேரத்தில் எப்படி உணர்ந்தீர்கள்?
4 யாரெல்லாம் இது போன்ற முறையில் நடத்தப் பட்டுள்ளனர்?

*யோவான் 15:18-23*
1 நம்மை மற்றவர்கள் எப்படி நடத்துவார்கள் என்று எதிர்பார்க்க வேண்டும்?
2 ஏன் இந்த உலகம் நம்மை வெறுக்கிறது?
3 நாம் சீடராக மாறும் போது ஏன் மக்கள் குற்ற உணர்ச்சி அடைகிறார்கள்?

*அப்போஸ்தலர் 4:13-22*
1 பேதுருவையும், யோவானையும் எது தைரியமாக இருக்க செய்தது?
2 யாராவது உங்களை உபதேசிக்கும்போதோ, பேசும்போதோ, ஜெபம் செய்யும் போதோ தடை செய்ய முயற்சித்து இருக்கிறார்களா?
3 நீங்கள் எப்படி செயல்பட்டீர்கள்?

*அப்போஸ்தலர் 5:17-29*
1 இயேசு பொறாமையினால் துன்பப்படுத்தப் பட்டார் (மாற்கு 15:9). அப்போஸ்தலரும் பொறாமையினால் கைதுசெய்யப் பட்டார்கள்.
2 நாம் ஏன் துன்பப்படுவோம்? அவதூராக பேசப்படுவோம்?
3 யாரால்?
4 அப்போஸ்தலர்கள் தடுத்து நிறுத்தப்படும் போது அவர்களுடைய பதில் என்னவாயிருந்தது?

*அப்போஸ்தலர் 5:40-42*
எது அப்போஸ்தலர்களை சந்தோஷப் படுத்தியது?

*செயல்முறை*
வசனம் 42-யே உங்கள் நோக்கமாக இன்றும், என்றும் வைத்து கொள்ளுங்கள்.



## 22 கொடுக்கும் வாழ்க்கை

*யோவான் 13:1-17*
1 இயேசு அவருடைய முழுமையான அன்பை எப்படி காட்டினார்?
2 அவர் தம் சீடர்களுக்கு என்ன சொல்லிகொடுக்க முயன்றார்?
3 வசனம் 17-ஐ எப்படி கீழ்படிய முடியும்?
4 அதற்குறிய குறிப்பிட்ட உதாரணங்களை எழுதவும்.

*அப்போஸ்தலர் 9:36-42*
1 தொர்காள் எதனால் எல்லோராலும் அன்பு செய்யப்பட்டாள்?
2 அவளுடைய விஷேசமான நண்பர்கள் யார் யார்?
3 அவள் எதற்காக அவர்கள் அனைவருக்கும் அவ்வளவாக உதவினாள்?
4 நீங்கள் மரித்தபிறகும் நினைக்கப் படும் காரியங்கள் எவை?
5 தொற்காள் வாழ்க்கை மூலம் எதை நாம் கற்ற கொள்ள முடியும்?

*பிலிப்பியர் 2:19-24*
1 எவைகள் தீமோத்தேயுவை மற்றவர்களிடமிருந்து வேறுபடுத்தி காட்டின?
2 மற்றவர் நலத்தைப் பற்றி அவர் உண்மையாய் விசாரிக்கிறார் என காட்டியவை எவை?
3 எப்படி நீங்கள் அதிகமாக தீமோத்தேயுவை போல மாற முடியும்?

*செயல்முறை*
இன்னொரு சீடரை நீங்கள் உண்மையாய் பொறுப்பெடுத்து கவனிக்கிறீர்கள் என்பதை காட்டும்படி என்ன செய்யமுடியும்? அதை இன்றே செய்யுங்கள்.

## 23 பாவத்தை அறிக்கை செய்தல்

*சங்கீதம் 32:1-7*

1 நாம் நம் பாவங்களை மறைத்து அறிக்கையிடாமல் இருக்கும்போது எப்படி உணர்கிறோம்?

2 நீங்கள் ஞானஸ்நானம் பெற்றதிலிருந்து இது போல் உணர்ந்திருக்கிறீர்களா? நீங்கள் அறிக்கையிட பயந்த பாவங்கள் இருக்கின்றனவா?

*நீதிமொழிகள் 28:13*

1 நமது பாவங்களை கடவுளிடமிருந்து மறைக்க முடியுமா?

2 கடவுளைத்தவிர வேறு யாரிடம் நமது பாவங்களை அறிக்கையிட வேண்டும்?

3 அறிக்கையிடப்படாத பாவங்கள் நம் வாழ்க்கையில் என்ன விபரீதங்களை உண்டாக்கும்?

*லூக்கா 8:17*

நம் பாவங்களை மறைக்க முயற்சிப்பது ஏன் முட்டாள் தனமானது?

*சங்கீதம் 66:18-19*

நாம் பாவத்தை மறைத்தோ அல்லது அதில் மூழ்கியோ இருந்தோமானால் வேறு என்ன நடக்கும்?

*செயல்முறை*

நீங்கள் மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ளாததால் உங்களை வேதனைபடுத்தும் பாவங்கள், எண்ணங்கள், செயல்கள், சிந்தனைகள், இவைகள் பற்றி எழுதி, கண்டிப்பாக அவைகளைப் பற்றி இன்றே பேசுங்கள்.



## 24 குடும்ப பாரங்கள்

*மாற்கு 3:20-21*

1 இயேசுவின் குடும்பத்தார் ஏன் அவரைக் குறித்து எரிச்சல் அடைந்தார்கள்?

2 நீங்கள் உங்களையே கெடுத்து கெள்வதாக நினைத்து, உங்கள் குடும்பத்தில் யாராவது, நீங்கள் கடவுளுக்கு ஊழியம் செய்வதை தடுக்க முயற்சி செய்திருக்கிறார்களா?

3 இயேசு அவர்களுக்கு ஒத்து போயிருந்தால் என்ன நடந்திருக்கும்?

*யோவான் 7:1-9*

1 இயேசுவின் சொந்த சகோதரர்கள் அவரைப் பற்றி என்ன நினைத்தார்கள்?

2 இயேசு தன் குடும்பம் எதிர்பார்த்ததை ஏன் செய்யவில்லை?

*மத்தேயு 10:37-39*

1 இயேசு சொல்வதை கேட்பதைவிட, நாம் எப்படி குடும்பத்தை அன்பு செய்ய முடியும் என்பதை பட்டியலிடு.

2 உங்கள் வாழ்கையை யாராவது பார்த்தால், நீங்கள் யாரை அதிகமாக அன்பு செய்வதாக சொல்வார்கள்?

*செயல்முறை*

உங்கள் குடும்ப எதிர்பார்ப்புகளை குறித்து எப்படி உணர்கிறீர்கள் என்பதை பற்றி ஒரு பலமான சீடரிடம் பேசுங்கள். நீங்கள் சில மாற்றங்கள் செய்ய வேண்டியதுள்ளதா?

## 25 வெளிப்படையாக இருத்தல்

*யோவான் 15:15*

1 இயேசு சீடர்களிடம் என்ன பகிர்ந்து கொண்டார்?

2 மற்ற கிறிஸ்தவர்களிடம் இப்படிப் பட்ட நண்பராக இருக்கிறீர்களா?

3 உங்கள் வாழ்கையைப் பற்றிய எல்லா காரியங்களும் உண்மையிலேயே மற்றவர்களுக்கு தெறியுமா?

*2கொரிந்தியர் 6:11-13*

1 எங்கள் வாய் உங்களோடே பேசத் திறந்திருக்கிறது என்றால் என்ன?

2 உங்கள் இருதயம் திறந்து மற்றவர்களிடம் பேசுகிறீர்களா?

3 யாரிடமும் வெளிப்படையாக இல்லாத சில காரியங்கள் என்ன?

*நீதிமொழிகள் 20:5*

வெளிப்படையாக இருந்து, மற்றவர்கள் உங்களை வழிநடத்த உதவுகிறீர்களா? அல்லது உங்கள் மனதில் உள்ளதை தெறிந்து கொள்ள, அனேக கேள்விகள் கேட்க வேண்டுமா?

*செயல்முறை*

வெளிப்படையாக இல்லாத உணர்வுகள், திட்டங்கள், இரகசிய பாவங்கள் இவைகளை எழுதவும். இந்த வாரத்தில் இதை குறித்து மற்ற கிறிஸ்தவர்களிடம் பேசுங்கள். வெளிப்படையாக இருங்கள்.



## 26 சந்தேகங்களை கையாளுதல்

*மத்தேயு 11:1-6*

1 இயேசுவை பற்றி கேள்விப் பட்டும் ஏன் யோவான் சந்தேகமடைய துவங்கினான்?

2 சந்தேகங்களை போக்க யோவான் என்ன செய்தான்?

3 உங்கள் மனதில் சந்தேகம் வரும்போது நீங்கள் என்ன செய்ய வேண்டும்?

*மத்தேயு 18:16-17*

செவிகொடாமற்போகும் சீஷர்களை என்ன செய்ய வேண்டுமென இயேசு சொன்னார்? இது உங்களை ஆச்சரியப்படுத்துகிறதா?

*1கொரிந்தியர் 15:11-14*

1 கொரிந்து நாட்டு கிறிஸ்தவர்களின் சந்தேகம் என்ன? ஆரம்பத்தில் எல்லோரும் விசுவாசித்தார்கள், ஆனால் பிறகு சிலர் சந்தேகித்தார்கள்.

2 விசுவாசித்த பிறகும் சந்தேகப்பட்ட சில போதனைகள் எவை?

*லூக்கா 24:36-45*

1 சந்தேகங்கள் எங்கிருந்து வருகின்றன?

2 விசுவாசம் உள்ளவர்களாக இருக்க, இயேசு எப்படி அவர்களுக்கு உதவி செய்தார்?

*செயல்முறை*

தேவனின் வார்த்தை, ஜெபம், கீழ்படிதல், வெளிப்படையாக இருப்பதன் மூலமாக எப்படி சந்தேகங்களை மேற்கொள்ள முடியும் என்பதை எழுதவும்.

## 7 உண்மையாக இருக்க கற்றுகெள்ளுதல்

'உண்மையாக இருப்பது' என்பதின் அர்த்தம் என்ன?

*1கொரிந்தியர் 13:4-7*

1 அன்பு என்ற வார்த்தைக்கு பதிலாக உங்கள் பெயரிட்டு, இந்த வேதபகுதியை முழுவதும் எழுதவும். உங்கள் நட்புறவுகளை மனதில்கொண்டு, மீண்டும் ஒருமுறை படிக்கவும்.

2 இதில் நீங்கள் மாறவேண்டியது என்ன?

*எபேசியர் 4:29*

1 எந்த வகையான வார்த்தைகள் மற்றவர்களை கெடுக்கும்?

2 தயவு இல்லாமல், தூஷித்து, கேளிசெய்து பேசி இருக்கிறீர்களா?

*1தெசலோனிக்கேயர் 5:12-15*

1 கர்த்தருக்குள் உங்களை விசாரணை செய்கிறவர்கள் யார்?

2 இது அவர்களின் வாழ்கை முறையைப் பொறுத்து இருக்கிறதா?

3 அதிகமாக பிரயாசப்பட்டு, உதாரணமாக இருந்து, புத்திசொல்கிற சில கிறிஸ்தவர்களின் பெயர்களை எழுது. அவர்களை உங்கள் இருதயத்திலிருந்து மரியாதை செலுத்துகிறீர்களா?

4 பலவீனரையும், மெதுவாக கற்றுகொள்பவர்களையும் குறித்து உங்கள் எண்ணம் எப்படி இருக்க வேண்டும்?

*செயல்முறை*

நீங்கள் மரியாதை செய்யும் ஒருவருக்கும், கர்த்தருக்குள் உங்களை விசாரணை செய்கிறவருக்கும், உற்சாகம் தேவைபடும் நபருக்கும் ஒரு பாராட்டு கடிதம் எழுதவும்.



## 28 மாறுபட்ட சிந்தனைகள் (கருத்து வேறுபாடுகள்)

*ரோமர் 14:1-8*

1 இன்றைய கிறிஸ்தவர்கள் மத்தியில் உள்ள மாறுபட்ட சிந்தனைகள் எவை? (உடை, இசை, உணவு, பாணங்கள்)

2 இவைகளை வித்தியாசமாக சிந்திக்கும் மக்களைக் குறித்து உங்கள் எண்ணம் எப்படி இருக்க வேண்டும்?

*ரோமர் 14:16-23*

1 தேவன் எதை குறித்து எதிகமாக கவனிக்கிறார்?

2 மற்றவர்களுக்கு இடறல் உண்டாகும்படி ஏதாவது செய்கிறீர்களா?

3 வசனம் 23-ன் அர்த்தம் என்ன?

4 உங்கள் வாழ்க்கை முறையைக் குறித்து நல்லது என்று உணர்கிறீர்களா?

*1தீமோத்தேயு 2:9-10* மற்றும் *1பேதுரு 3:3-4*

1 கடவுள் முன் ஒரு பெண்ணை அலங்கரிப்பது எது?

2 உடையையும் பக்தியையும் பற்றி இந்த வசனங்கள் என்ன கற்று கொடுக்கின்றன என்பதை உங்கள் சொந்த வார்த்தைகளால் எழுதவும்.

*மத்தேயு 11:18-19*

1 இயேசுவையும் யோவான் ஸ்நானகனையும் மக்கள் ஏன் தவறாக பேசினார்கள்?

2 இவர்கள் இருவரும் வித்தியாசமாக இருந்தாலும் தேவனுக்கு பிரியமாக நடந்து கொண்டார்கள்- எப்படி?

*செயல்முறை*

கிறிஸ்தவனுக்கு எது நல்லது கெட்டது என்று உங்களிடத்தில் கேள்விகள் இருக்கிறதா? முதிர்ச்சியடைந்த சீஷரிடம் விளக்கம் கேட்டு, கருத்து வேறுபாடுகளைக் குறித்து நீங்களே ஒரு முடிவுக்கு வரவும்.

## 29 இயேசு சீக்கிரம் வருவார்

*2பேதுரு 3:3-14*
1 கர்த்தர் வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்ததை ஏன் சில மக்கள் பரியாசம் செய்கிறார்கள்?
2 ‘‘கர்த்தருடைய நாள்’’ எப்படி இருக்கும்?
3 இன்றுகூட இயேசு வரலாம் என்ற எண்ணத்தோடு வாழ்கின்றீர்களா?

*1தெசலோனிக்கேயர் 4:13-18*
1 இந்த வசனங்களை 2பேதுரு 3:7,10 வசனங்களோடு ஒப்பிடவும். தேவனை சந்திக்க தயாராக இல்லாதவர்களுக்கு ‘இரண்டாவது வாய்ப்பு’ இருக்குமா?
2 இரவிலே திருடன் வருகிறவிதமாய்க் கர்த்தருடைய நாள் இருக்கும்-ஏன்? (1தெசலோனிக்கேயர் 5:2)
3 ‘‘விழித்துக்கொண்டு தெளிந்தவர்களாயிருக்கக்கடவோம்’’ என்பதின் அர்த்தம் என்ன? (1தெசலோனிக்கேயர் 5:6)

*2தீமோத்தேயு 4:6-8*
1 நியாயத்தீர்ப்பு நாளை சந்திப்பது குறித்து பவுல் என்ன நினைக்கிறார்?
2 கிறிஸ்துவுக்காக வாழ்வது நல்ல போராட்டத்தைப் போராடுதல், ஓட்டத்தை முடித்தல், விசுவாசத்தைக் காத்துக்கொள்தல் போல இருக்கிறது- எப்படி?
3 இறுதிவரை இதேபோல் கிறிஸ்துவுக்காக வாழ்வதற்கு எப்படிப்பட்ட முயற்சிகளை எடுக்க வேண்டும்?

*செயல்முறை*
இன்றே உங்கள் வாழ்க்கையின் கடைசிநாள் போல, ஒவ்வொரு நாளும் வாழவேண்டும்.



## 30 அன்பில் ஒற்றுமையாக இருப்பது

*சங்கீதம் 133:1-3*
ஒற்றுமை என்றால் என்ன? சபையில் ஒற்றுமையாக இருப்பது ஏன் முக்கியமானது?

*எபேசியர் 4:1-3*
1 வசனம் 2ஐ உங்கள் சொந்த வார்த்தையில் விவரிக்கவும். அதற்கு மாறாக நடந்தால் என்ன நடக்கும்?
2 ஒற்றுமையுடன் இருக்க ஏன் எல்லாவித முயற்சியும் எடுக்க வேண்டும்?

*பிலிப்பியர் 2:1-5*
1 ‘‘இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்றையே சிந்தித்து’’ என்பதின் அர்த்தம் என்ன?
2 எப்படி ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணமுடியும்?
3 தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குகிறீர்களா? கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தை என்ன? உங்களிலும் அதே சிந்தை இருக்கிறதா?

*மத்தேயு 18:15-17* மற்றும் *மத்தேயு 5:23-24*
1 நமக்குள் சண்டைகளோ கருத்துவேறுபாடுகளோ வந்தால், அதை எப்படி சரிசெய்ய வேண்டுமென்று இயேசு விரும்புகிறார்?
2 யார் மற்றவரிடம் முதலில் செல்ல வேண்டும்?
3 சபையில் யாரிடமாவது நீங்கள் பிரச்சனையை சரிசெய்ய வேண்டியதாயிருக்கிறதா?

*செயல்முறை*
உங்களுடைய நட்புறவுகளை நினைத்துப் பாருங்கள். எல்லா சகோதர சகோதரிகளோடும் ஒற்றுமையாய் இருக்க ஜெபியுங்கள். இயேசு செய்வதுபோல் நீங்கள் யாரை அன்பு செய்யவில்லையோ, அவரிடம் சென்று நேரம் செலவிடுங்கள்.

## 31 அதைரியத்தை அகற்றுவது

எலியா தீர்க்கதரிசி தற்பொழுதுதான் கடவுளிடமிருந்து மாபெரும் வெற்றியைப் பெற்றார். அதாவது தமது ஊக்கமான ஜெபத்தினால், 450 பொய்யான தீர்க்கதரிசிகளை அழித்து, 3வருடம் 6மாதங்களுக்கு பிறகு முதல் முறையாக மழை உண்டாக்கினார். (யாக்கோபு 5:17-18ஐ பார்க்கவும்). ஆனால் அதன் பிறகு பயமடைந்து தைரியம் இழந்தார்.

*1இராஜாக்கள் 19:1-8*

1 ஏன் எலியா மிகவும் மனசோர்வடைந்தார்?

2 உங்களை மனசோர்வடையச் செய்யும் காரியங்கள் எவை?

3 எப்படி தேவன் எலியாவின் உடல், ஆவி, உணர்வுகளை உற்சாகப் படுத்தினார்?

4 நீங்கள் மனசோர்வடையும் பொழுது என்ன செய்வீர்கள்?

5 அடுத்தமுறை மனசோர்வடையும் பொழுது எப்படி உடல், ஆவி, உணர்வுகளை உற்சாகப் படுத்துவீர்கள்?

*1இராஜாக்கள் 19:19-21*

நண்பராகவும் சீஷராகவும் தனக்கு எலிசா கிடைத்தபோது, எலியா எப்படி உணர்ந்தார்? எலிசாவிடத்திற்கு அனுப்புவதற்குமுன், எலியா உற்சாகப்படும் வரை ஏன் தேவன் காத்திருந்தார்?

*செயல்முறை*

அதைரியத்தை எப்படி அகற்ற முடியும்? இன்று கற்றுக் கொண்டதை யாரிடமாவது பகிர்ந்து கொள்ளுங்கள்.



## 32 இயேசுவைப் போல் நடந்து கொள்ளுதல்

*1யோவான் 2:5-6*

கடந்த பல நாட்களைப்பற்றி நினைத்து பார்க்கவும். நீங்கள் இயேசுவைப்போல் நடந்து கொண்டு இருக்கீர்களா?

*மாற்கு 1:21-28*

1 இயேசு போதித்த வழி எப்படி வித்தியாசமாக இருந்தது?

2 நீங்கள் மற்றவர்களுக்கு வசனத்தின் அதிகாரத்தோடு போதிக்கிறீர்களா?

*மாற்கு 1:29-34*

1 கடந்த நாள் இரவில் இயேசு எவ்வளவு நேரம்வரை வேலை செய்திருக்கலாம் என்று நினைக்கிறீர்கள்?

2 அவர் களைப்படைந்திருக்கலாம் என்று நினைக்கிறீர்களா?

3 ஏன் அவர் கடினப்பட்டு உழைத்தார்?

4 கடினமான நேரத்திலும் இயேசு பற்றி மற்றவர்களுக்கு அறிவிக்க, விருப்பம் உள்ளவர்களாய் இருக்கின்றீர்களா?

*மாற்கு 1:35*

1 அவர் அதிகாலையில், இருட்டோடே எழுந்து ஜெபம்பண்ணினார் என்பதை பாருங்கள். ஏன் அப்படி செய்தார்?

2 இயேசுவைப் போல நீங்களும் ஜெபத்தின் அவசியத்தை உணர்கிறீர்களா?

*மாற்கு 2:13-17*

1 எப்படிப்பட்ட மக்களுடன் இயேசு நட்பு வைத்துக்கொண்டார்? ஏன்?

2 பாவிகளையும் பக்தியில்லாதவர்களையும் நீங்கள் எப்படி நடத்துகிறீர்கள்?

3 நற்செய்தியை பரிமாறிக்கொள்ள புதிய நண்பர்களை உருவாக்கி கொள்கிறீர்களா?

*செயல்முறை*

இயேசுவைப் போல் எப்படி நடந்து கொள்ளமுடியும் என்று, இன்றைய பாடத்திலிருந்து இரண்டு காரியங்களை எழுதவும். அதேபோல் நடக்கவும்.

## 33 ஆகாயமண்டலத்தின் ஒளியைப்போல

*பிலிப்பியர் 2:14-16*

1 மற்றவர்களுக்காக எப்படி ''ஜீவவசனத்தைப் பிடித்துக்கொண்டு'' இருக்கிறீர்கள்?

2 நம்மை சுற்றி உள்ளவர்களுக்கு எப்படிப்பட்ட உதாரணமாக இருக்க வேண்டும்?

3 நீங்கள் சமீபத்தில் தர்க்கித்து, முறுமுறுத்து இருக்கிறீர்களா? அதிலிருந்து எப்படி மாறமுடியும்?

*1கொரிந்தியர் 9:19-23*

1 எப்படி எல்லாருக்கும் அடிமையாக முடியும்? (உதாரணம் கொடுக்கவும்)

2 எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு நீங்கள் எல்லாருக்கும் எல்லாமாக வேண்டுமென்றால், எந்த சில வழிகளை கையாள வேண்டும்?

*சங்கீதம் 126:6*

1 சீஷர்களை உருவாக்க செல்கிறவன் எப்படி அழுதுகொண்டு போகிறவனாக இருக்கிறான்?

2 அப்படி செல்பவர்களுக்கு என்ன நிச்சயமுண்டு?

*தானியேல் 12:3*

நீங்கள் ஞானவான்களாக இருக்கிறீர்களா?

*செயல்முறை*

இன்று விசுவாசத்தை பகிர்ந்து கொள்ளும்போது, மக்களை ஆழமாக அன்பு செய்யக்கூடிய இருதயத்திற்காக ஜெபியுங்கள்.



## 34 திருத்தத்தை ஏற்றுக் கொள்ளுதல்

*கலாத்தியர் 2:11-16*

1 பேதுருவின் பாவம் என்ன?

2 ஏன் பவுல் பேதுருவை மற்றவர்களுக்குமுன் திருத்தினார்? (1தீமோத்தேயு 5:20 மத்தேயு18:15)

*2கொரிந்தியர் 7:8-13*

1 பவுல் ஏன் கொரிந்தியர்களை எதிர்த்து திருத்தினார்?

2 நீங்கள் திருத்தப்படும்போது எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்?

3 யாராவது உங்களை சமீபத்தில் திருத்தியிருக்கிறார்களா?

4 நீங்கள் எப்படி பதில் கொடுத்தீர்கள்?

5 உங்களின் பதில் அவர்களை உற்சாகப்படுத்தியதா?

*கலாத்தியர் 6:1-5*

1 ஒருவருக்கொருவர் உதவி செய்ய நாம் எப்படி கடமை பட்டிருக்கிறோம்?

*நீதிமொழிகள் 15:31-32* மற்றும் *நீதிமொழிகள் 16:18*

எந்த வசனம் உங்களைப் பற்றி சொல்கிறது?

*செயல்முறை*

நீங்கள் எப்படி திருத்தத்தை ஏற்றுக் கொள்கிறீர்கள் என்று வழிநடத்துனரிடம் கேளுங்கள். நீங்கள் மனம் திரும்ப வேண்டியது உண்டா?

## 35 கிறிஸ்தவன் என்ற பெயருக்கு தகுதி

*1பேதுரு 4:12-19*

1 கிறிஸ்துவுக்காக நீங்கள் பட்ட பாடுகள், நிந்தனைகள் யாவை?
2 அதைக் குறித்த உங்கள் எண்ணம் எப்படி இருக்க வேண்டும்?
3 நீங்கள் கிறிஸ்துவுக்காக பாடுபடும் போது, எப்படி சிந்திக்க செயல்பட வேண்டுமென்று சாத்தான் விரும்புவான்?

*எபிரேயர் 10:32-34*

1 இந்த விதமான உபத்திரவம் அனுபவித்திருக்கிறீர்களா?
2 பாடுகள், நிந்தனைகள் அனுபவிக்கும் கிறிஸ்தவர்கள் உற்சாகப் படம்படி என்ன செய்கிறீர்கள்?

*எபிரேயர் 11:32-40*

1 கிறிஸ்துவின் நாமத்திற்காக சிங்கம், அக்கினியின் உக்கிரம், வாள், அந்நியருடைய சேனைகள், வாதிக்கப்படுதல், அடிகள், காவல், கட்டுகள் இவைகளை சந்தித்ததுண்டா அல்லது குறைந்தது நிந்தைகளாவது அடைந்ததுண்டா?
2 இவர்களை தேவன் எப்படி அக்கறை கொள்கிறார்?

*2கொரிந்தியர் 11:23-29* மற்றும் *ரோமர் 8:18*

1 எப்படிப் பட்ட ஒரு வாழ்க்கையை பவுல் இயேசுவுக்காக வாழ்ந்தார்?
2 பவுல் தம்முடைய பாடுகளைப் பற்றி எப்படி உணர்ந்தார்?
3 கிறிஸ்தவராகிய நீங்கள் சந்தோஷப்படுகிறீர்களா அல்லது குறைசொல்லிக்கொண்டு இருக்கிறீர்களா?

*செயல்முறை*

'கிறிஸ்தவன்' என்ற பெயர் உங்களுக்கு தகுதி என்று இயேசு சொல்வாரா?



## 36 நம்பிக்கை மற்றும் எதிர்காலம்

1 உங்கள் எதிர்காலத்தைக் குறித்து கவலைப்படுகின்றீர்களா?
2 அதைக் குறித்த நம்பிக்கை மற்றும் பயங்கள் என்ன?

*எரேமியா 29:11-13*

முழு இருதயத்தோடும் தேவனை தேடுபவர்களுக்கு அவர் என்ன வாக்குறுதி கொடுக்கின்றார்? நீங்கள் தேவனைத் தேடுகின்றீர்களா அல்லது வேறு எதையாகிலும் தேடுகின்றீர்களா?

*சங்கீதம் 37:3-4*

உன் இருதயத்தின் வேண்டுதல்கள் என்ன? அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள்செய்வார் என்று விசுவாசிகிறாயா?

*சங்கீதம் 16:5-8*

உங்கள் வாழ்க்கையைப் பற்றி இப்படி உணர்கிறீர்களா? ஏன்?

*1தீமோத்தேயு 6:6-10*

1 எது உங்களை போதுமென்கிற மனதுடன் இருக்கச் செய்யும்?
2 பண ஆசையும் பொருள் ஆசையும் உங்கள் வாழ்க்கையை என்ன செய்யும்?
3 எப்படி சிலர் விசுவாசத்தைவிட்டு விலகி செல்கிறார்கள்?
4 வேறே எந்த ஆசைகள் உங்கள் விசுவாசத்தை விட்டு விலகிச் செல்லும்?

*ரோமர் 8:31-32*

உங்கள் மீது உள்ள அன்பை தேவன் எவ்வாறு விளங்கப்பண்ணுகிறார்?

*செயல்முறை*

உங்கள் வாழ்க்கையில் ஏக்கங்களும் போதுமென்ற மனம் இல்லாமலும் இருந்தால், அதை விசுவாச குறைச்சல் என்று உணர்ந்து, தேவன் உண்மை உள்ளவர் என்பதை நீங்கள் உணரும்படியாக மேலே சொல்லப்பட்ட ஒரு வசனத்தை மனப்பாடம் செய்துகொள்ளுங்கள்.

## 37 கொடுப்பதின் கிருபை

*லூக்கா 21:1-4*

1 இந்த விதவையிடமிருந்து என்ன கற்று கொள்ள முடியும்?
2 இவள் காணிக்கை கொடுக்காமல் இருக்க எந்த 3 காரணங்களை சொல்லியிருக்கலாம்?

*1தீமோத்தேயு 6:17-19*

நீங்கள் பணக்காரராக இருந்தால் எப்படி வாழ வேண்டும்?

*2கொரிந்தியர் 9:6-15*

1 தேவனுக்கு அதிகமாக கொடுக்க முடிவு செய்திருக்கிறீர்களா?
2 மனதில் தீர்மானித்த தொகையை தொடர்ந்து கொடுகின்றீர்களா?
3 தாராளமாக கொடுப்பவர்களுக்கு தேவன் கொடுக்கும் வாக்குறுதி என்ன?
4 நீங்கள் கொடுக்கும் காணிக்கை எப்படி மற்றவர்களுக்கும் கடவுளுக்கும் உங்களுக்கும் பயனுள்ளதாக இருக்கின்றது?

*செயல்முறை*

உங்கள் காணிக்கை தாராளமாகவும் உண்மையுள்ளதாகவும் இல்லை என்று நினைத்தால், எவ்வளவு கொடுப்பது என்று தீர்மானித்து, தேவன் முன் எடுத்த தீர்மானத்திற்கு மரியாதை செய்யுங்கள்.



## 38 புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கு

*2தீமோத்தேயு 2:1-7*

1 வசனம் 2ஐ மத்தேயு 28:19-20 உடன் ஒப்பிட்டு பார்க்கவும். உலகத்தில் உள்ள அணைவரையும் சீஷராக மாற்ற இயேசுவின் திட்டம் என்ன?
2 ‘உண்மையுள்ள மனுஷர்கள்’ (வசனம் 2ல்) யார்? குறித்த நேரத்தில் வருதல், காலந்தவராமல் இருத்தல், அறிவுரையைப் பின்பற்றுதல் ஆகியவற்றில் உண்மையுள்ளர்களாக இருக்கின்றீர்களா?
3 சேவகன், மல்யுத்தம்பண்ணுகிறவன், பயிரிடுகிறவன் இவர்களை எவ்வாறு பின்பற்றுகிறீர்கள்? குறிப்பிட்டு எழுதவும்!
4 பவுல் அல்லது தீமோத்தேயு உங்களை, மற்றவர்களுக்குப் போதிக்க தேர்ந்தெடுத்திருப்பார்களா?

*1கொரிந்தியர் 9:24-27*

1 எப்படி கிறிஸ்தவ வாழ்க்கை ஒரு ஓட்டப் பந்தயம் போல் இருக்கின்றது?
2 பந்தயச் சாலையில் ஓடுகிறவன், இச்சையடக்கமாயும் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறனாயும் இராவிட்டால், என்ன நடக்கும்?
3 நீங்கள் இச்சையடக்கத்தோடும் ஒழுக்கத்தோடும் இராவிட்டால் என்ன நடக்கும்?

*செயல்முறை*

உங்களின் வேத வாசிப்பு, ஜெபம், நேரத்தை பயனுள்ளதாக்குதல் இவைகளை நன்நெறிபடுத்துவதற்கான வழிகளை எழுதுக! அவற்றை உங்கள் வழிநடத்துனரிடம் பேசுங்கள்.

## 39 விசுவாசமே ஜெயம்

*மாற்கு 2:1-12*

1 ஏன் இந்த மனிதன் இயேசுவை பார்க்கவேண்டும் என்ற உறுதியோடு இருந்தான்?
2 இயேசுவை பார்க்காமல் திரும்பிவிட அவன் எந்த 3 காரணங்களை சொல்லியிருக்கலாம்?
3 இந்த மனிதனைப் பற்றி இயேசுவை கவர்ந்த ஒரு விஷயம் என்ன?
4 இந்த மனிதனைப் போல் எப்படி உங்களால் மாற முடியும்?

*மாற்கு 5:21-43*

1 பன்னிரண்டு வருஷமாய்ப் பெரும்பாடுள்ள ஒரு ஸ்திரீ மற்றும் யவீரு, இவர்கள் இருவருக்கும் பொதுவாக இருந்தது என்ன?
2 ஏன் இயேசு அவர்கள் இருவருக்கும் உதவினார்?
3 நமக்கு உதவி தேவைப்படும் பொழுது, இயேசுவை முழுமையாக சார்ந்திருப்பது ஏன் முக்கியமாக இருக்கிறது?
4 உங்கள் வாழ்கையில் கடவுளை சார்ந்து செல்லாத சில வழிகள் எவை?
5 உதவிகாக வேறு எவற்றையாவது நாடி சென்று இருக்கிறீர்களா?

*மாற்கு 6:1-6*

1 இந்த இடத்தில் சூழ்நிலை எப்படி வித்தியாசமாக இருந்தது? ஏன்?
2 இயேசு உங்கள் விசுவாசத்தைக் குறித்து ஆச்சரியப்படுவாரா? அல்லது உங்களுடைய அவிசுவாசத்தைக் குறித்து ஆச்சரியப்படுவாரா? ஏன்?

*எபிரேயர் 11:5-6*

தேவனைப் பிரியப்படுத்த விசுவாசம் ஏன் அவசியம்?

*செயல்முறை*

உங்கள் (அல்லது மற்றொருவர்) வாழ்கையில் தேவனுடைய உதவி எந்த காரியத்தில் தேவைப்படுகிறது? ஜெப பட்டியலை வைத்து ஜெபிக்கவும்!



## 40 நல்ல இருதயம், நல்ல செயல், நல்ல காரியங்கள்

*லூக்கா 8:15*

1 உங்கள் இருதயம் இதேபோல் உள்ளதா?
2 உங்கள் வாழ்கை நிலம் எவற்றை விளைவிக்கின்றது?

*பிலேமோன் 4-7*

நல்ல இருதயமுள்ள பிலேமொன் செய்த 3 நல்ல காரியங்கள் எவை?

*2பேதுரு 1:5-11*

1 கிறிஸ்தவ வாழ்க்கையில் வளர்வதற்கு என்ன செய்ய வேண்டும்?
2 தைரியம், பொறுமை, சகோதர சிநேகிதம் ஆகியவற்றை விளக்குக!
3 கிறிஸ்தவ வாழ்க்கையில் தொடர்ந்து வளர்வதை நிறுத்தி விட்டால் என்னவாகும்?
4 10-வது வசனத்தின் அர்த்தம் என்ன?

*3யோவான் 2-6*

1 ஒரு சகோதரனோ அல்லது சகோதரியோ உங்களை வந்து பார்த்தால் உங்களுடைய வாழ்க்கை முறையை பற்றி என்ன சொல்வார்கள்?
2 இன்று வரை வாழ்ந்த கிறிஸ்தவ வாழ்க்கையை குறித்து எப்படி உணர்கிறீர்கள்?
3 நீங்கள் வளர்ந்து கொண்டே இருக்கின்றீர்களா?
4 எந்த விஷயத்தில் உங்களுக்கு உதவி தேவைப்படுகிறது?

*செயல்முறை*

நீங்கள் 40 நாள் பாடங்களை இப்பொழுது முடித்துவிட்டீர்கள். அடுத்து என்ன படிப்பது என்பதை பற்றி யோசித்து ஒரு முடிவு செய்யுங்கள், கடவுளிடம் நீங்கள் அழைத்துச் செல்லும் மக்களிடம் இவற்றை பரிமாறிகொள்ளுங்கள். வளர்ந்து கொண்டே இருங்கள்!!!

முற்றும்